வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண் 4300 / ஆ 4 / 2020 நாள் 04–12–2020

பொருள் — தேர்வுகள் – வேலூர் மாவட்டம் – தமிழ்நாடு ஊரகப் பகுதி மாணவர் திறனாய்வுத் தேர்வு (Trust Examination) ஜனவரி 2021 தேர்வு நடத்துதல் – விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்து பெற்று அரசுத் தேர்வுகள் இணையதளத்தில் உள்ளீடு செய்தல் சார்பான அறிவுரைகள் – சார்பு.

பார்வை — 1. அரசாணை நிலை எண் 960 கல்வித் துறை (இ2) நாள் 11–10–1991
2. அரசாணை நிலை எண் 256 பள்ளிக்கல்வத் துறை (அ2) நாள் 22–12–2008
3. G.O. (Ms) No.647, Revenue and Disaster Management (DM IV) Department Date : 16/11/2020
3. சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க எண் 029227 / டி / 2020 நாள் 04–12–2020

*********

பார்வையில் காணும் அரசாணைகள் மற்றும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதத்திற்கிணங்க அரசுத் தேர்வுத் துறையால் ஆண்டு தோறும் தமிழ்நாடு ஊரகப்பகுதி மாணவர்களுக்கான "ஊரகத் திறனாய்வு தேர்வு" நடைபெற்று வருகிறது.

<u>தகுதியான தேர்வர்கள்</u>

இத்தேர்விற்கு ஊரகப் பகுதியில் அதாவது கிராமப்புற பஞ்சாயத்து மற்றும் டவுன்சிப் அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் 2020 – 2021 ஆம் கல்வியாண்டில் 9–ம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்கள் இத்திறனாய்வு தேர்வு எழுதுவதற்கு தகுதி படைத்தவராவார்கள். நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் படிக்கும் மாணவர்கள் இத்தேர்விற்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவராவர்.

<u>ஆண்டு வருமானம்</u>

இத்தேர்வெழுத விண்ணப்பிக்க விழையும் மாணவ மாணவியரின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ, 1,00,000/– க்கு (ரூபாய் ஒரு இலட்சத்திற்கு) மிகாமல் இருத்தல் வேண்டும்.

வின்ணப்பங்களை பதிவிறக்கம் செய்தல்

**24.01.2021** அன்று நடைபெறவுள்ள ஊரகத் திறனாய்வுத் தேர்வுக்கான வெற்று விண்ணப்பங்களைை **07.12.2020** முதல் **14.12.2020** வரை www.dge.tn.gov.in என்ற அரசு தேர்வுகள் இயக்ககத்தின் இணையதளம் மூலம் பள்ளித் தலைமையாசிரியர்கள் பதிவிறக்கம் செய்து, அவ்வாறு பதிவிறக்கம் செய்யயப்பட்ட வெற்று விண்ணப்பங்களை மாணவர்களுக்கு வழங்கி பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் வருவாய்ச் சான்றினையும் இணைத்து **14.12.2020** க்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

தேர்வுக் கட்டணம்

ஊரகத் திறனாய்வுத் தேர்விற்கு விண்ணப்பிக்கும் மாணவர் ஒவ்வொருவரிடமிருந்தும் தேர்வுக் கட்டணமாக ரூ.**10**–னை பணமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். தலைமையாசிரியர்கள் இணைப்பில் கண்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி 'ONLINE' –ல் கட்டணத்தை செலுத்த வேண்டும்.

விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்தல்

தேர்வர்களிடமிருந்து பூர்த்தி செய்து பெறப்பட்ட அவ்விண்ணப்பங்களை பள்ளிக்கு வழங்கப்பட்ட USER ID, Password மூலம் தலைமை ஆசிரியர் தேர்வர்களின் அனைத்து விண்ணப்பங்களையும் **08.12.2020** முதல் **17.12.2020** வரை Online மூலம் பதிவேற்றம் செய்ய வேண்டும். மேற்படி தேதிக்கு பிறகு பதிவு செய்வது தடை செய்யப்படும் என்பதால் தேர்வர்கள் பாதிக்கப்படா வண்ணம் **17.12.2020** க்குள் பதிவு செய்து இணையதளம் மூலம் தேர்வுக்கட்டணத்தை செலுத்துமாறு. தெரிவிக்கப்படுகிறது. பதிவேற்றம் முடிந்த பிறகு Summary Report, பள்ளியில் பெறப்பட்ட மொத்த விண்ணப்பங்கள் (தேர்வர்களின் விவரங்களுடன்) **17–12–2020** அன்று மாலை **04.00** மணிக்குள் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக பி–**4** பிரிவு எழுத்தரிடம் நேரில் ஒப்படைத்திட பள்ளித் தலைமை ஆசிரியர்களை அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தாங்கள் ஆன்–லைன் மூலம் தமிழ் வழி மற்றும் ஆங்கில வழி தேர்வெழுதுவதற்கு பதிவு செய்யப்பட்ட மொத்தத் தேர்வர்களின் எண்ணிக்கை குறித்தான பதிவு தான் இறுதியான தேர்வர்களின் எண்ணிக்கையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

இத்தேர்விற்கான விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து தேர்வர்களுக்கு வழங்குதல் மற்றும் பதிவேற்றம் செய்வது குறித்தான விவரங்களை அனைத்து பணிகளையும் மேல்நிலை /

உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

**மேற்காண் அறிவுரைகளை தவறாது பின்பற்றி தேர்வுகளை நடத்துவதற்கான முன்னேற்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுமாறு அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**முதன்மைக் கல்வி அலுவலர்**
**வேலூர்**

**இணைப்பு**
**வழிகாட்டி நெறிமுறைகள்**
**படிவம்**
**பெறுநர்**
**அனைத்து ஊரகப் பகுதிகளில் உள்ள அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்**

**நகல்**
**மாவட்டக் கல்வி அலுவலர்**
**வேலூர் அவர்களுக்கு தகவலுக்ககாவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.**

# PROCEDURE

# TRUST EXAM 2020-2021 EVENTS

www.dge.tn.gov.in

↓

**CLICK** - ACCESS TO ONLINE PORTAL

↓

TRUST EXAM - JAN 2021
APPLICATION REGISTRATION

↓

School Registration

↓

ENTER - USER ID (UDISE CODE) - PASSWORD (EMIS NO)

**Step 1** : (i) Instructions for Existing School in EMIS Portal

(ii) Instructions for Schools (Which does not have account in EMIS Portal)

**Step 2** : (i) After Registration Process.

**Step 3** : Instructions for EMIS Registered school to enroll their students.

**Step 4** : How to apply - Enroll the students does TRUST exam.

(i) for schools under EMIS.

(ii) for schools not in EMIS.

**Step 5** : How to pay TRUST Exam Enrollment Fees.

**Step 6** : How to General the report for applied students.

**ஆகிய 6 படிநிலைகளை** (Step 1 to Step 6) **முடிந்தவுடன்** Summary **மற்றும் தேர்வுக் கட்டணத் தொகையினை 17–12–2020** அன்று மாலை **04.00** மணிக்குள் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக பி**–4** பிரிவு எழுத்தரிடம் நேரில் ஒப்படைத்திட பள்ளித் தலைமை ஆசிரியர்களை அறிவுறுத்தப்படுகிறார்கள்**.**

# தமிழ் நாடு ஊரகப் பகுதி மாணவர்களுக்கான திறனாய்வுத் தேர்வு

## ஜனவரி 2021

| வ. எண் | பணி விவரம் | சென்ற ஆண்டு 2019 | இவ்வாண்டு 2020 |
|---|---|---|---|
| 1. | ஊரகத் திறனாய்வுத் தேர்வுக்கு செய்தி அறிவிக்கை அரசுத் தேர்வு உதவி இயக்குநர் வழியாக செய்தித் தாளில் வெளியிடப்பட்ட நாள் | 15.07.2019 | 05.12.2020 |
| 2. | பள்ளித் தலைமை ஆசிரியர்கள் விண்ணப்பங்களை ஆன்–லைன் மூலம் பதிவிறக்கம் செய்து மாணவர்களுக்கு வழங்கிய பின்னா் பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன், வருவாய்ச் சான்றினையும் இணைத்து பெறுவதற்கான கடைசி நாள் | 15.07.2019 முதல் 25.07.2019 வரை (10 நாட்கள்) | 07.12.2020 முதல் 14.12.2020 வரை (8 நாட்கள்) |
| 3. | மாணவர்களிடமிருந்து பூர்த்தி செய்து பெறப்பட்ட விண்ணப்பங்களை பள்ளித் தலைமை ஆசிரியர்கள் டீடேைநே மூலம் பதிவேற்றம் (ருயீட்டியன) செய்வதற்கான கடைசி நாள் | 25.07.2019 முதல் 09.08.2019 வரை (13 நாட்கள்) | 08.12.2020 முதல் 17.12.2020 வரை (10 நாட்கள்) |
| 4. | முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட மாவட்டங்களில் தேர்வு எழுதும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப தேர்வு மையங்களை அமைத்து எந்தெந்த பள்ளிகளை எந்த தேர்வு மையத்துடன் இணைக்க வேண்டும் என்பதை உறுதி செய்து தேர்வு மைய விவரங்களுடன் பதிவேற்றம் செய்வதற்கான கடைசி நாள் | 10.08.2019 முதல் 22.08.2019 வரை (10 நாட்கள்) | 18.12.2020 முதல் 24.12.2020 வரை (7 நாட்கள்) |
| 5. | நுழைவுச் சீட்டு / Nominal Roll பதிவிறக்கம் செய்யும் தேதி (Hall Ticket & NR) | 23.09.2019 முதல் 27.09.2019 வரை | 18.01.2021 முதல் 24.01.2021 வரை |
| 6. | சென்ற ஆண்டு தேர்வு நடைபெற்ற நாள் | 29.09.2019 | 24.01.2021 |

**விண்ணப்பப் படிவம்**

**தமிழ்நாடு ஊரகப் பகுதி மாணவர் திறனாய்வுத் தேர்வு (கூசுருளுகூ) – ஜனவரி 2021**

**1. பெயர்** (Name in capital letters in English) (Not to exceed 28 letters)

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

**2. பாலினம்** (Sex) : [ ]

M for Male
F for Female
T for Transgender

**3. பிறந்த தேதி** (Date of Birth in Christian Era) :

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

**4. தந்தை / பாதுகாவலர் பெயர்** :
(Father's/Guardian's Name)

**5. பள்ளியின் பெயர் மற்றும் முகவரி** :
(School Name and Address)

**6. தேர்வெழுதும் மொழி** : TAMIL / ENGLISH
Medium for Examination)

**7.பெற்றோரின் அலைபேசி எண்** :
Mobile Number of the parents

**பெற்றோர் / பாதுகாவலர் உறுதிமொழி**

**மேற்காண் விவரங்கள் யாவும் உண்மை என்றும் எனது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/–க்கு மிகாமல் உள்ளது எனவும் சான்று அளிக்கிறேன். வருவாய் துறையினரிடமிருந்து பெற்ற வருவாய் சான்றினை இத்துடன் இணைத்துள்ளேன்.**

**பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்.**

**தலைமை ஆசிரியர் சான்று**

**மேற்படி மாணவர் ஊரகப் பகுதியிலுள்ள இப்பள்ளியில் பயின்றவர் என்றும் 2019–2020 ஆம் கல்வியாண்டில் 8–ம் வகுப்பில் பயின்று ஆண்டு இறுதித்தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் எனவும் சான்றளிக்கப்படுகிறது.**

**பள்ளி முத்திரை:**

**நாள்:**

**தலைமையாசிரியர் கையொப்பம்**